ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2080/21 - 2018 ජූලි මස 16 වැනි සඳුදා - 2018.07.16
2080/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற் சங்க
உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05,
2018, யூலை 10.

### அட்டவணை

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1958 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11605 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவிப்பிற்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், கடைசியாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27 ஆந் திகதிய 1803/22 ஆம் இலக்க அதிவிசேட வத்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்டுள்ள முடிவுகள் பகுதி II ற்குப் பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

II ஆம் பாகம்
தொழிலாளர் வகுப்பு

**'ஏ' வகுப்புத் தொழிலாளர்**

காரியத் தலைவர் (போர்மன்). உணவு தயாரிப்போர், சிற்றுண்டி தயாரிப்போர், மாப்பண்டம் தயாரிப்போர் கேக் அலங்கரிப்போர்.

**'பி' வகுப்புத் தொழிலாளர்**

மாப்பிசைவோர், அளப்போரும் நிறுப்போரும், பிரிப்போர், முறுக்குவோர், மாத்தோய்த்த பணிகார வேலையாளர், மாப்பண்ட வேலையாள், மாத்தோய்த்த பணிகார இயந்திர இயக்குநர், பொரிப்போர், வெண்ணெய்யும் சீனியும் கலப்போர், சீனியால் அலங்கரிப்போர், சுற்றிக்கட்டும் இயந்திர இயக்குநர்.

**'சீ' வகுப்புத் தொழிலாளர்**

மா குவிப்போர், மா அரிப்போர், சுருட்டும் இயந்திர வேலையாளர், சீனி அரைப்போர், மேசை வேலையாளர், தகட்டுக்கு எண்ணெய் பூசுவோர், தகடு வேலையாளர், தட்டில்பாண் அடுக்குவோர், தட்டில் சீனி அப்பம் அடுக்குவோர், தட்டில் கேக் அடுக்குவோர், பாண் வெட்டுவோர், காய்கறி, கனிகள் சுத்தம் செய்வோர், பாலாடை நிரப்புவோர், பாண் சுடும் உதவியாளர், பாண் அடுப்பில் இடுவோர், தட்டு அடுக்குவோர், பாணும் சீனியப்பமும் அடுக்குவோர், கேக் அடுக்குவோர், வெட்டுவோர், கருகியவற்றைச் சுரண்டி எடுப்போர், கையால் சுற்றிக் கட்டுவோர், பொதியிடுவோர், பொது உதவியாளர் மற்றும் விநியோகிப்போர்.

**மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதங்கள்**

| ஊழிய ஆண்டு | ஏ வகுப்பு<br>ரூ. ச. | பீ வகுப்பு<br>ரூ. ச. | சீ வகுப்பு<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,180.00 | 11,125.00 | 10,070.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,330.00 | 11,250.00 | 10,170.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,480.00 | 10,375.00 | 10,270.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,630.00 | 11,500.00 | 10,370.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,780.00 | 11,625.00 | 10,470.00 |
| 6 ஆம் ஆண்டு | 12,930.00 | 11,750.00 | 10,570.00 |
| 7 ஆம் ஆண்டு | 13,080.00 | 11,875.00 | 10,670.00 |
| 8 ஆம் ஆண்டு | 13,230.00 | 12,000.00 | 10,770.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,380.00 | 12,125.00 | 10,870.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,530.00 | 12,250.00 | 10,970.00 |
| 11 ஆம் ஆண்டு | 13,680.00 | 12,375.00 | 11,070.00 |

8 - 51

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.